කම්කරු හා විදේශ රැකියා අමාත්‍යාංශය
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
Ministry of Labour and Foreign Employment

හයවන මහල, "මෙහෙවර පියෙස", නාරාහේන්පිට, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
6 ஆவது தளம், "மெஹெவர பியெச", நாரஹேன்பிட்டி, கொழும்பு 05, இலங்கை.
6th Floor, " Mehewara Piyesa", Narahenpita, Colombo 05, Sri Lanka.

මගේ අංකය / எனது இல / My No. : MFE/DEF/HOB/03/vol ii
ඔබේ අංකය / உமது இல / Your No. :
දිනය / திகதி / Date : 2022.08.31

**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் : 02/2022**

**வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு முழு அளவிலான மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி உரிமங்களை வழங்குவதற்கான திட்டம்**

1. பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தும் நோக்குடன் கௌரவ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கும் மற்றும் வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்கள் தமது வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தை நாட்டிற்கு அனுப்பி வைப்பதன் மூலம் தேசியப் பொருளாதாரத்திற்கு ஆற்றிய பங்களிப்பினைப் பாராட்டும் வகையிலான இடைநேர் அமைச்சரவைக் குறிப்பிற்கும் 2022 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய அமைச்சரவை முடிவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

2. நாட்டின் வங்கி முறைமையினூடாக இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியை அனுப்புகின்ற வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்கள், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள திட்டங்களில் ஒன்றான முழு அளவிலான மின்சார வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்கு ஏதுவாக இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

3. இந்த சுற்றறிக்கை நியதிகளின் பிரகாரம், வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான அதிகாரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சிடம் உரித்தளிக்கப்படும்.

4. **நிபந்தனைகள்**

4.1 இந்த அனுகூலத்தைப் பெறுவதற்கு உரித்துடையவராவதற்கு, வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்களினால் நாட்டின் வங்கி முறைமையினூடாக அனுப்பப்பட்ட வெளிநாட்டு நாணயத் தொகையில் குறைந்தபட்சம் 50% இலங்கை ரூபாவாக மாற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் இதனகத்து அட்டவணை 4.4 இல் குறித்துரைக்கப் பட்டுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே நடைமுறையில் இருத்தல் வேண்டும் என்பதுடன், வங்கி முறைமையினூடாக நாட்டிற்கு அனுப்பப்படும் வெளிநாட்டுச் செலாவணியானது அரசாங்க வரிகள் உள்ளடங்கலாக வாகனமொன்றின் இறக்குமதிக்கு ஏற்புடையதான அனைத்துச் செலவுகளையும் தீர்த்து வைப்பதற்குப் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.

4.3 அட்டவணை 4.4 இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு மேலாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர் ஒருவர் முதலாவது அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்கு உரித்துடையவராவர் என்பதுடன், பதிவு செய்யப்பட்ட இரண்டு (2) வருடங்களின் பின்னர் வாகனத்தை மூன்றாம் தரப்பினருக்கு மாற்றுவதற்கும் அனுமதி வழங்கப்படுகின்றது.

ලේකම්/செயலாளர்/Secretary : +94 112 368164 කාර්යාලය/அலுவலகம்/Office : +94 112 581991 ෆැක්ස්/தொலைநகல்/Fax : +94 112 582938/+94 112 368165
විද්‍යුත් තැපෑල/மின்னஞ்சல்/E-mail : slmol@slt.lk / slmol @labourmin.gov.lk වෙබ් අඩවිය/இணையத் தளம்/Web site: www.labourmin.gov.lk

**4.4** **வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் பின்வருமாறு.**

| **பணம் அனுப்பும் பெறுமதி அமெரிக்க டொலர்** | **வாகனத்தின் வகை** | **வாகனத்தின் உரித்து மற்றும் CIF பெறுமதியுடன் தொடர்புடைய பணம் அனுப்பும் காலம்** |
|---|---|---|
| 3,000 அல்லது அதற்குமேல் | மின்சாரத்தில் இயங்கும் இரண்டு சக்கர வாகனங்கள்<br><br>(மோட்டார் சைக்கிள்-HS குறியீடு – 8711) | 2022 மே 01 முதல் 2023 ஏப்ரல் 30 வரை அல்லது அந்தத் திகதிக்கு முன்னர் முதலாவது வாகன அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் திகதி வரைக்கும் அனுப்பப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் தொகையில் 50% இற்கும் குறைவாகவோ அல்லது சமமாகவோ மற்றும் அதிகபட்ச CIF பெறுமதியான 25,000 $ பெறுமதிக்கு அமைவானது. |
| 20,000 அல்லது அதற்குமேல் | நான்கு சக்கரங்களுடன் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள்<br><br>[மோட்டார் கார்- HS குறியீடு-8703 வர்த்தக வாகனம் – HS<br><br>குறியீடு 8704 (டபிள் கப்,வான், டிப்பர்) | 2022 மே 01 முதல் 2022 டிசம்பர் 31 வரை அல்லது அந்த திகதிக்கு முன்னர் முதலாவது வாகன அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் திகதி வரைக்கும் அனுப்பப்பட்ட வெளிநாட்டு செலாவணித் தொகையில் 50% இற்கும் குறைவாகவோ அல்லது சமமாகவோ மற்றும் அதிகபட்ச CIF பெறுமதியான 65,000 $ பெறுமதிக்கு உட்பட்டது. |

4.5 இத்திட்டத்தின் கீழ் மின்சார வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்கான வாகன அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக போலியான ஆவணங்கள் அல்லது பொய்யான தகவல்களைச் சமர்ப்பிக்கும் எவரேனும் நபருக்கு எதிராக இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்களின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், அவர் , வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு அரசாங்கத்தால் / இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வழங்கப்படும் எந்தவொரு அனுகூலத்தையும் பெற்றுக்கொள்வதிலிருந்து 10 வருட காலப்பகுதிக்கு தகுதியற்றவராக்கப்படுவார்.

## 5. **பூர்த்தி செய்யப்பட வேண்டிய அளவுகோல்கள்**

5.1 மின்சார வாகனத்தின் மின்கலத் தொகுதி (பட்டரி பக்) மற்றும் மின்சார மோட்டர் குறைந்ததபட்சம் 3 ஆண்டுகளுக்கு தயாரிப்பாளரின் உத்தரவாதத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், சர்வதேச மின்சார வாகனங்களுக்கான (EV) வீதிப் பாதுகாப்பு நியமங் களுடன் இணங்குவதை உறுதி செய்தல் வேண்டும்.அங்கீகரிக்கப்பட்ட / நியம நடைமுறைகள்/ முறைமைகளுக்கு அமைவாக, பயன்படுத்தப்பட்ட மின்கலத்தை முறையாக அகற்றுவதற் கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

5.2 மின்சார வாகனத்தின் உயர் மின்னழுத்த மின்கலம் மற்றும் மின்வலு முகாமைத்துவ முறைமைகள், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கிச் செல்லுதல் வேண்டும்.

5.3 வாகனம் புதியதாகவோ அல்லது பூஜ்ஜிய 'ஓடோமீட்டருடன்' கூடியதாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன், மின்சார வாகனமும் அதன் மின்கலமும் உற்பத்தி செய்யப்பட்ட வருடத்திலிருந்து 06 மாதங்களுக்குள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுதல் வேண்டும்.

5.4 நான்கு சக்கர வாகனமாக இருந்தால், ஒரு முறை மின்னேற்றம் செய்தால் குறைந்தபட்ச பயண வரம்பெல்லை 200 கிலோ மீற்றருக்கும் அதிகமாக இருத்தல் வேண்டும்.

5.5 வரவுக் கடிதத்தை (LC) வழங்குவதற்குத் தேவையான நிதியானது, பயனாளி அவரது வங்கிக் கணக்கிலிருந்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் ஊடாக உரிய கம்பனிக்கு மாற்றுதல் வேண்டும். (வாகனத்தை இறக்குமதி செய்வதற்கான மொத்தச் செலவும் பயனாளியினால் அனுப்பப்பட்ட பணத்திலிருந்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்) வாகனத்தின் செலவு வெளிநாட்டு நாணயத்திலிருந்து உரிய தரப்பினருக்கு செலுத்தப்படுதல் வேண்டும். உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கு பயனாளியால் அனுப்பப்பட்ட வெளிநாட்டு செலாவணியை மாற்றியதன் பின்னர் ஏற்புடைய அரசாங்க வரி ரூபாவில் செலுத்தப்படுதல் வேண்டும்.

## 6. செயல்பாட்டு நடவடிக்கைமுறை

6.1 இத்திட்டத்தின் கீழ் மின்சார வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் இணையத்தளத்தில் (www.labourmin.gov.lk) இருந்து அல்லது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணையத்தளத்திலிருந்து (www.slbfe.lk) பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவமானது உரிய அனைத்து ஆவணங்களுடன் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

6.2 இத்திட்டத்திற்குத் தகைமையுடைய வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்களினால் நாட்டிற்கு அனுப்பப்படும் வெளிநாட்டு நாணயத் தொகை உள்ளடங்கலாக மொத்த வருடாந்த பண அனுப்பல்களைக் குறிப்பிடுகின்ற உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் ரூபாவாக மாற்றப்பட்ட பணத்தின் அளவும், வெளிநாட்டு நாணயச் சேமிப்பும் உரிய வங்கியினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். (இந்த நோக்கத்திற்காக படிவமொன்று அறிமுகப்படுத்தப்படும்).

6.3 வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையரினால் முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தையும், ஏனைய ஆவணங்களையும் சொல்லப்பட்ட இலங்கையரினால் அல்லது அவரால் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுக்கு சமர்ப்பித்ததன் பின்னர், மேற்குறிப்பிட்ட அமைச்சு வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவதுடன், அவ்வாறு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஆறு (06) மாத காலப்பகுதிக்கு செல்லுபடியாகும்.

இத்திட்டத்தின் கீழ் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு ஆவணத்தினதும் உண்மைத்தன்மையை உரிய அதிகாரிகளிடமிருந்து உறுதிப்படுத்துவதற்கான அதிகாரம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிடம் காணப்படுகின்றது.

7. **பொருள்கோடல்**

இந்த சுற்றறிக்கையில் "வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையரொருவர்" என்பது ஏதேனும் வெளி நாட்டில் தொழில் புரியும் எவரேனும் இலங்கையர் என்பதைக் கருதுகின்றது. அதனை உறுதிப்படுத்துவதற்காக, தொழில் ஒப்பந்தத்தின் / உடன்படிக்கையின் பிரதியொன்று அல்லது தொழில் வழங்குனரினால் தொழிலை உறுதிப்படுத்தி வழங்கப்பட்ட கடிதமொன்றின் பிரதியொன்று அல்லது பிற வேறு உரிய ஆவணத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இதிலுள்ள விடயங்கள் தொடர்பில் தங்களுக்கு ஏதேனும் தெளிவுபடுத்தல் தேவைப்படுமாயின், தயவுசெய்து இந்த அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரை (நிருவாகம்) +94 112 582 447 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இந்த சுற்றறிக்கை, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினதும், இலங்கை மத்திய வங்கிங்கியினதும் ஒப்புதலுடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்/ஆர்.பி.ஏ.விமலவீர
செயலாளர்
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு